REG. NO. M. 2997.

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

RÉPUBLIQUE FRANÇAISE
LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

PULSATE ET APERIETUR VOBIS

# VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. II. புதுவை, யுவ ஹு சித்திரை மீ ரு உ (18—4—35) NO. 21.

## திருவாய் மொழி.

திறம்பாதேன் னெஞ்சமே செங்கண்மால் கண்டாய்
அறம்பாவ மென்றிரண்டு மாவான்—புறந்தானிம்
மண்தான் மறிகடல்தான் மாருதந்தான் வான்தானே
கண்டாய் கடைக்கட் பிடி.

பிடிசேர் களிறளித்த பேராளா உன்றன்
அடிசேர்ந் தருள்பெற்று ளன்றே—பொடிசேர்
அனல்கங்கை யேற்று னவிர்சடைமேல் பாய்ந்த
புனல்கங்கை யென்னும் பேர்ப் பொன்.

பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேலும் ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன்.

இனிதென்பர் காம மதனிலு மாற்ற
இனிதென்பர் தண்ணீரு மெந்தாய்—இனிதென்று
காமநீர் வேளாது நின்பெருமை வேட்பரேல்
சேமநீ ராகும் சிறிது.

தேருங்கால் தேவ னொருவனே யென்றுரைப்பர்
ஆரு மறியா ரவன்பெருமை—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே யெத்தவம்செய் தார்க்கும்
அருள்முடிவ தாழியான் பால்.

பாலில் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும்
ஆலில் துயின்றதுவு மாரறிவார்—ஞாலத்
தொருபொருளை வானவர்தம் மெய்ப்பொருளை அப்பில்
அருபொருளை யானறிந்த வாறு.

உ

திருவருள் துணை.

நந்திபதி கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

[திருவாசகம்]


# வித்தகம்

புதுவை

யுவ ஹூ சித்திரை மீ 5 உ


## ஆறுவது சினம்.

ஔவையார் அருளிய ஆத்திசூடி என்னும் சூத்திரக் கொத்துள் ஒன்றாகி மிளிரும் இவ் அமுத வாக்கியம் உலகியலுக்கும் உண்மை நிலைக்கும் ஒப்பியதாகின்றது. ஒருவனுக்கு உள்ளே தணிய வேண்டியது சினம் என்பது இதன் பொருளாகும்.

அறஞ் செய விரும்பு என்னும் முதற் சூத்திரத்தால் குறிக்கப் பட்ட அறம் என்னும், நித்தியத்துவத்தை அடைதற்குரிய குரு நெறியை அணவுபவன்பாலும் குருவருளால் அத்தகைய நெறியில் நிற்பவன்பாலும் இன்றியமையாத ஒழுக்கமாகி முதற்கண் அமைய வேண்டியது சினம் தணிதலே ஆதலின் இஃது இரண்டாம் சூத்திரமாகி அமைவதாயிற்று. கோபம், சினம், சீற்றம், வெகுளி என்பன போது வகையான் ஓரே பொருளில் வழங்கப் படுவனவாயினும் சிறப்பு வகையான் இவை தம்முள் வேறுபாடுடையன என்றே கொள்ளுதல் வேண்டும். முன்னிலையில் திரிகாணங்களாலும் உளவாகும் தீய அசைவு கண்டு தன்னிலையில் அசுத்த அக்கினி ஆக்க முறுதலால் உளவாகும் மனக் குழப்பமே—அவச்சலனமே கோபம் எனப்படுவது. இவ் அவச்சலனம் புறத்தே நன்று புலனாகும்படி உளவாகும் செயலே—முன்னிலையில் சீறி விழுதலே—பாய்தலே சீற்றம் எனப்படுவது. இச் சீற்றம் புறத்துப் புலனாகாதவாறு சாமர்த்தியமாக அடக்கப்பட்டு மேல் சாதித்தற்குரிய சமயம் நோக்கி மனதைப் பற்றி நிற்குங்கால் சினம் எனப்படும். மற்று வெகுளி என்பது யாதோ எனின்; அதன் இயல்பு முன்னர்க் கூறப்படும். கோபம் சீற்றம் சினம் என்பன மூன்றும் அசுத்த தநுவாகிய மருளுடம்புக்கு உரியனவாகும். அஃதாவது அசுத்த மடைந்த மூலாக்கினியின் காரியம் என்பது. கோபம் என்பது மனதைப் பர்றிச் சினமாகி நிர்பது மிகத் தீது. சினத்தைப் பொருளாகக் கொண்டவன் கேடடைதல் திண்ணம்.

### குறள்.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் [கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

(ஷை 31ம் அதி. வெகுளாமை செ. 7)

நிலத்தில் அடித்தவனது கையானது தவறாது அந்நிலத்தில் படுதல் நிச்சயமாதல் போல, சினத்தையே பிறரை அடிப்படுத்துதற்குக் கருவியாகக் கொண்டவன் தன் ஆற்றல் இழந்து கேடடைதல் நிச்சயம் என்பது இதன் பொருளாகும். சினமுடையவன் மனம் எஞ்ஞான்றும் அவதியடைவதே யாகும். இதனால் சாங்கோபாங்கமாகப் பல தீமைகளும் ஆக்கமுறுகின்றன. உடலில் அசுத்த நிறையே அதிகரிக்கின்றது. பிணி மூப்புச் சாக்காடுகள் உளவாகின்றன. அற முதல் நாற் பொருளும் கெடுகின்றன. ஆதலால் ஒருவன் தன் மாட்டுச் சத்துவமாகிய சுத்த நிறை ஆக்கமுறுதலால், தான் இரட்சிக்கப்படுதலை — நித்தியத்துவம் பெறுதலை விரும்புவானாயின், அவன் சினம் என்பது தன் உள்ளத்திற் குடி கொள்ளாதவாறு அதனைப் புறம்பே வைத்துத் தன்னைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும். அன்றேல் அச்சினமே அசுத்த நிறை என்னும் காலனைத் தன் உடலகத்து ஆக்கமுறச் செய்து அவனைச் சாதலடையச் செய்யும் என்பது திண்ணம். பின் வரும் தேவர் திருவாக்கு இவ்வுண்மையை நன்று வலியுறுத்துதல் கண்டு கொள்க.

### குறள்.

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக் [கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

(ஷை 31ம் அதி. வெகுளாமை செ. 5)

சினம் மனதில் குடி கொள்ளுதலால் லௌகிகம் பாரமார்த்திகம் இரண்டும் கேடடைகின்றன. சினமுடையவன் நடுவு நிலைமை உடையவனாதல் — பொறை உடையனாதல் — நிறையுடையனாதல் முடியாத காரியம். நிறை விண்டால் காலன்; நிறை கொண்டால் காலன் மூலனாகின்றான் — நித்தியத்துவம் உளதாகும் என்பது. நிறையின்மையே — அசுத்த நிறையே காலன் என்பது பின் வரும் அப்பர் திருவாக்கானும் நன்று புலப்படும்.

### அப்பர் தேவாரம்.

நடுவிலாக்காலன்வந்துநணுகும்போதறிய
வொண்ணா
அடுவனஅஞ்சுபூதம்அவைதனக்காற்றகில்
[லேன்

படுவெனலவுங்குற்றம்பாங்கிலாமனிதர்
[வாழ்க்கை
கெடுவதிப்பிறவிசீசீகினரொளிச்சடையி
[னீரே.

(ஷை தனித்திருநேரிசை செ. 10)

ஆதலால் முன்னிலை அசைவுகளைப் பொருட்படுத்துதலால் மனதில் சினம் என்னும் அழுக்குக் குடி கொள்ளாத படி மதி வைராக்கியத்தோடு ஒழுகுதல் வேண்டும். ஒருகால் கோபம் ஆக்க முறினும் அது சிற்றமாய்ப் புறத்துப் புலனாகாதவாறு பயிலுதலால் முன்னிலைகளால் நேரும் துன்பம் ஒழியும். அதனால் தன்னிலையும் சுகம் அடையும். அன்றி, சினத்தை மனதில் குடி கொள்ள வைத்தலால் ஆனை போலத் தருணம் வாய்த்த இடத்துப் பிறர்க்குத் தீமை புரிய நேரும் ஆதலால், அச்சினம் ஒரு சிறிதாவது மனதில் குடி கொள்ளாதவாறு காத்து ஓம்புதலே சிறந்த அறத்தாறு ஆகும்.

## நன்னெறி.

———

உள்ளங்கவர்ந்தெழுந்தோங்குசினங்
[காத்துக்
கொள்ளுங்குணமேகுணமென்க—வெள்ளம்
தடுத்தலரிதோதடங்கரைதான்பேர்த்து
விடுத்தலரிதோவிளம்பு.

(ஷை செ. 8.)

என்பது புலவர் பெருமானாகிய சிவப்பிரகாசசுவாமிகள் நீதி வாக்கு. கோபம் உண்டாயவழி அது சீற்றமாகாமலும் அச்சீற்றம் செல்லாத வழி அது மனதைப் பற்றிச் சினமாய் நிலைக்காமலும் பின் அச் சினம் தருணம் வாய்த்த இடத்துச் சாதித்தலால் பிறர்க்கு தீமை பயவாமலும் தணிய வேண்டியதே முறையாகும். இவ்வாறு மதி வைராக்கியத்தால் கோபம்—சினம் புறத்துப் புலனாகாதவாறு அதனைத் தணியச் செய்வதே உலகியலுக்கு ஒப்பியவாறு தணிதல் என்பதன் பொருளாகும்—தந்திரமாகும்— உபாயமாகும் என்பது. சினம் மனதில் குடி கொள்ளுதலால் லௌகிக சித்திகளும் பாரமார்த்திகமும் கேடடைகின்றன. சினம் குடிகொண்ட அழுக்கு மனத்தில் உவகை ஏற்படமாட்டாது. அதனால் முகமும் வாட்டமுடையதாயே—மலர்ச்சி அற்றதாயே இருக்கும். இத்தகைய சினத்தினும் மிக்க பகை வேறில்லை என்றனர் தேவர்.

## குறள்.

———

நகையும் உவகையும் கொல்லும் சினத்திற்
பகையும் உளவோ பிற.

(ஷை 31-ம் அதி. வெகுளாமை செ. 4)

காமம் கோபம் முதலிய குணங்கள் எல்லாம் ஒரு குலையின் கண் உள்ள தேங்காய்கள் போல அசுத்த நிறையின் காரியமாய் அமைந்துள்ளன. ஆதலால் ஒரு குணம் வெளியே தோன்றப் பெறும் ஒருவன் மற்றைய குணங்களையும் பூரணமாய் உடையவனே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. சினம் மனதைப் பற்றி நிற்றலால் சரீத்தில் அசுத்த நிறையே அதிகரிக்கின்றது. அமல நிறை கேடடைகின்றது. அஃதாவது "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய சிவம் என்னும் அமல அக்கினியானது அசுத்த நிறை ஆக்கமுறுதலால் கேடடைகின்றதென்பது. பின் வரும் தேவர் திருவாக்கு இவ்வுண்மையை நன்று புலப்படுத்துவதாகும்.

## குறள்.

———

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி
[இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

(இ—ள்) சினம் என்னும் அசுத்த அக்கினி யானது, நமது உடலகத்து நமக்கு இனமாய் — பற்றுக் கோடாய் உள்ளது என்று வேதங்களால் போற்றப்படுவதாய் நம்மைத் தாங்கிக் கொடு சென்று நித்தியமாகிய கரையில் சேர்க்கும் தோணி போன்ற அமல நிறையையும் அழித்து விடும் என்பதாம். அமல நிறை அமல ஒளி சத்துவம் சிவம் என்பன ஒன்றே. ஏமப் புணை — ஏமமாகிய புணை; ஏமத்தை அளிக்கும் புணை. நம்மை இரட்சிக்கும் தோணியாய் "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆய் உள்ள எம் பெருமான் திருவடி. பிறவிப் பெருங் கடலைக் கடத்தற்குரிய தோணியாகிய ஏமப் புணை எம்பெருமான் திருவடியே என்பது பின் வரும் தேவர் திருவாக்கானும் நன்று வலியுறுகின்றது.

## குறள்.

———

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்
பிறவாழி நீந்த லரிது. [லால்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

(ஷை 1-ம் அதி. கடவுள் வாழ்த்து செ. 8, 10)

இவ்வாற்றால் சினம் இருமைக்கும் கேடு பயப்பதாதல் — நித்தியத்துவம் என்னும் வீடு பேற்றிற்குத் தடையாதல் வெள்ளிடை மலையாம். "இனமென்னும் ஏமப் புணையைச் சுடும்" என்பது மரணம் உளதாகும் — எம் பெருமான் புறப்பட்டுப் போய் விடுவான் என்னும் பொருளை உடையது. நித்தியத்துவம் பெற்ற மெய்யடியாரெல்லாம் சினம் தீது எனவும் அதனை ஒழிக்க வேண்டும் எனவும் அருளிப் போந்தனர்.

## அப்பர் தேவாரம்.

———

மனமெனுந்தோணிபற்றிமதியெனும்
[கோலையூன்றி
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகட
[லோடும்போது
மதமெனும்பாறைதாக்கிமறியும்போதறிய
[வொண்ணா
துனையுனுமுணர்வுநல்காய்ஒற்றியூருடைய
[கோவே.

(ஷை திருவொற்றியூர் திருநேரிசை செ. 2)

## பட்டினத்தடிகள்.

———

"கோபத்தீமூட்டும்கொல்லன் துருத்தியை"

(ஷைகோயில் திரு அகவல்)

காமக்குரோதம்சடக்கேனேஎன்குதே
நாமேஅரசென்னநாடோறும்எண்ணுதே.

(ஷை புலம்பல்)

## கடுவெளிச்சித்தர் பாடல்.

“.............................................
கோபம்தொடுத்திடலாமோ
.............................................“

(ஷை செ. 1)

“........................பொல்லாச்
சண்டாளக்கோபத்தைச்சாதிந்துக்
[கோல்லு.”

(ஷை செ. 8)

சாதித்துக் கோல்லுதல் — குருவருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் மாற்ற மடையச் செய்தல். இவ்வாறு மாற்றமடைதலே

ஆறுவது சினம்

என்பதன் உண்மை நிலேக்கு ஒப்பிய பொருளாகும். கோபம் முதலிய குணங்கள் மருளுடம்பில் உள்ள அசுத்த நிறையின் காரியமாதலால் அசுத்த மடைந்த மூலாக்கினியே கோபமாய்ப் பரிணமிக்கின்றது. மனம் அழுக்கடைதலால் முன்னிலேயில் குருட்டுப் பார்வை செலுத்தப்படுகின்றது. இத்தகைய மனமாசு சீவச் செயலாதலால் — சீவ இயலாதலால் சீவ முயற்சியால்— தற்சுதந்தரத்தால் விரைவில் அடக்கப்படுதலும்— ஒழிக்கப்படுதலும் முடியாத காரியம். சரீர பௌதிக பஞ்சீகரணங்களின் இயல்புக்கு ஏற்ற வாறே மன நிலே அமைதலால் அவற்றைச் சமப்படுத்துதற்கு ஏற்ற அருந்தல் பொருந்தல்களாகிய தூலப் பயில்வுகளாலும் திருவருணுட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சூக்குமமான பயில்வுகளாலும் மூலாக்கினி சுத்தமடைய வேண்டும். அடையவே மனமாசு அணு அணுவாக நீங்கும். நிறை முறையான அருந்தல் பொருந்தல் அமையப் பெருதார் மனமாசு நீங்குதல் — சின முதலிய தீய குணங்கள் நீங்குதல் முடியாத காரியம். இது பற்றியே,

விருந்திலோர்க்கில்லே போருந்திய
[வோழுக்கம்

என அருளிச் செய்தனள் ஔவை என அறிதற்பாற்று. இச்சூத்திரத்தின் விளக்கமான உரையை “வித்தகம்” தொகுதி 1 இல 17 இல் காண்க. குருவருளால் பெறப்படும் உரிய சாதகங்களாற்ருன் — அருந்தல் பொருந்தல்களாற்ருன் சினம் மாற்றமடைய வேண்டும். சினம் மாற்றமடையவே அதனேடு தொடர்புடைய காமம் முதலிய குணங்களும் மாற்றமடையும். திருவருட் சகாயத்தாலன்றி, சீவ முயற்சியால் சினம் ஒழிக்கப்பட முடியாமை பற்றியே, சினத்தை அழிக்க வேண்டும் — ஒழிக்க வேண்டும் எனக் கூருது சினம் தணிய வேண்டும் — மாற்றமடைய வேண்டும் என அத்தகைய தணிதல் வினையைச் சினத்தின்மேல் ஏற்றி, ஆறுவது சினம் என்று கூறப்பட்டது.

உரிய சாதகங்களால் இவ்வாறு மாற்றமடைந்த சினமே வேகுளி எனப்படுவது என்க. விமல தநுவுடைய மெய்யடியார்க்கே உரியது வேகுளி என்பது.

## குறள்.

குணமென்றுங் குன்றேறி நின்ருர் வேதுளி
கணமேயுங் காத்தல் அரிது.

(ஷை 3-ம் தங். நித்தார் பெருமை செ. 9)

என்னும் தேவர் திருவாக்கால் வெள்ளிடை ஆம்.

பின் வரும் வேதவாக்கு வேகுளியின் இயல்பை நன்று புலப்படுத்துவதாகும்.

## மூவடி முப்பது.

மெய்யுரனில்குணம்வேதுளியே அத்தால்
சிறியரைக்கடிதலும்தீமையச்சுறுத்தலும்
பெருமைபேணலும்பெறுதலின்நன்றே.

(ஷை அறக்கூறு—வெகுளி—சூக்தம் 20)

மேய் உரன் இல் குணம் வேகுளி— மெய்யாகிய வாய்மையே உரனுக அமைந்த இல்லாகிய சரீரத்தின் குணமே வெகுளி எனப்படும் என்பது. இவ் அரிய பெரிய சூக்தப் பொருள் அமயம் நேர்ந்துழி விளக்கமுற உரைக்கப்படும். ஒருவன் தன்னேத் தான் திருத்தி அமைத்துக் கொண்டால், அவன் முன்னிலேயோரைத் திருத்துமாறு கையாள வேண்டிய கருவிகளில் தலேயாயது வேகுளியே ஆம், கோபமன்று. கோபம் வெகுளி என்பன பொருளால் வேறு பாடுடையன என்பது மேலே கூறப்பட்டது. கோபத்தால் தீமையும் வெகுளியால் நன்மையும் உண்டு. தன்னேத் தான் திருத்திக் கொண்டவன் யார்? எனின், அவனே மெய்யாகிய வாய்மையே உரனுக அமைந்த இல்லாகிய உடலே உடையவன் — விமல தேகமாகிய ரக்ஷக தேகமுடைய மெய்யடியான் என்க. இவ்வாறு மாற்றமடைந்த உடலம் உடைய மெய்யடியான் குணம் வேகுளியே. இப் பெற்றி கைவரப் பெருத எம்போலிய மருளுடம்பினர் குணம் கோபமே—சீற்றமே—சினமே என்க. அசுத்த காமம் சுத்த காமமாதத் திரிதல் போல அசுத்தமாகிய கோபமும் மெய்யடியார்க்கு வேகுளியாகத் திரியும் என்க. இத்தகைய வெகுளியாற்ருன் துட்டரை நிக்கிரகஞ் செய்து சிட்டரைப் புரப்பர் மெய்யடியாராகிய சிவகாருண்ணிய மூர்த்திகள் என்க. மெய்யடியாரால் இத்தகைய வெகுளி நிறை முறையோடு ஆளப்படும்—வழங்கப்படும் என்க.

அமல முதற்படியானது ஏகாதசமானதால், அப்படியை அடைந்து வரும் ஒருகால் கீழ் நிறையில் புகுதல் நேருமாயின் — அதனுல் அவர்பால் உள்ள வெகுளியும் நிறை முறை கடந்து இயலுமாயின், தீமை உளதாகும் என்பது பற்றியே, இன்ன நிறை முறையில்லா வெகுளியும் ஒழியப்பட வேண்டும் எனத் தேவரால் கண்டிக்கப்

(8-ம் பக்கம் காண்க)

உ

திருவருள் துணை.

புதுவை

# ஸ்ரீ மணக்குள விநாயகர் பதிகம்.

"வித்தகம்" ஆசிரியர்
யாழ்ப்பாணம் தென்கோவை
ச. கந்தையபிள்ளை யவர்கள்
இயற்றியது.

புதுவை நந்தி யெம்பெருமான் அடியார் குழாத்துள்
ஒருவராகிய
ஸ்ரீமதி. மாரிமுத்தம்மையார்
எம்பெருமான் திரோதானத் திருவடியில் திருத்தக ஒடுங்கிய
மூன்றாவது ஆண்டு நிறைவு விழாக்காலமாகிய
நிகழும் பவ ஆண்டு பங்குனித் திங்களில் திருவாதிரை
நாளில் (10-4-35), ஷை நிறைவு விழா இடையூறின்றி
இனிதின் இயலும் வண்ணம்,
ஷை விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக
சோடச உபசார அலங்கார விழவு நடாத்தி, அன்னவன்
அருள் ஆசியை வேண்டிச் சந்நிதானத்தில் ஓதப்பட்ட
இப் பதிகம் ஆண்டுக் குழுமி நின்று தரிசனம் செய்த
அன்பர்கட்கு வழங்கப்பட்டது.

## தரவு கொச்சகம்.

உலகமெலாம் படைத்தளித்தே யொடுக்குநிலைக் களமாகி
இலகுபிர ணவவடிவாம் எழிலானை முகத்தவனே
அலகிலருட் சித்தியெலாம் அளித்தருளும் ஐங்கரனே
மலமகற்றும் புதுவைநகர் மணக்குளத்து விநாயகனே.

உடலுயிர்க ளமலமடைந் தோவடிவின் மன்னுதலே
திடமுறுநற் சீவமுத்தித் திறமென்னத் தெரிப்பதுபோல்
கடமொழுகுங் களிற்றுமுகங் காட்டியருள் குருமணியே
மடமகற்றும் புதுவைநகர் மணக்குளத்து விநாயகனே.

விதிக்குயவன் வனைந்துவிடும் விடக்குடம்பிற் பொய்
[வாழ்வை
மதிக்கமன மொருப்படா மாண்புடைமெய் யடியர்தமை
துதிக்கையா லெடுத்தருளாந் தூநெறியிற் செலவிடுப்பாய்
மதிக்கலைவாழ் சென்னியனே மணக்குளத்து விநாயகனே.

துரியநிறை சுடரேயுன் துணையடிகள் தொழுதடைந்தேம்
மருமலர்போல் விமலசிவ மணங்கமழும் அடியருடற்
புருவநடு வெனுங்குளத்துப் பொருந்துசெயல் காட்டுதல்
[போல்
விரைமலர்ப்பூம் பொழிற்புதுவை மணக்குளம்வாழ்
[விநாயகனே.

விக்கினங்க ளகற்றியருள் வீறளிக்கு மாண்பினால்
விக்கினவி நாயகனென் றுனைப்போற்றும் வேதமெலாம்
நக்கனருள் திருமதலாய் நின்னடியை நண்ணியஎம்
விக்கினங்கள் ஒழித்தருளாய் மணக்குளத்து விநாயகனே.

சித்தியெலாம் அருளுதலாற் சித்திவிநா யகனென்றே
இத்தலத்தோர் குதூகலத்தோ டியம்புமொழி பழு
[தாமோ!
எத்தொழிற்கும் இறைவாவுன் இணையடிக்கே சரண்
[புகுந்தேம்
சித்தர்தொழும் புதுவைநகர் மணக்குளம்வாழ் தேசிகனே.

செங்கமலத் திருவனைய மாரிமுத்தாம் சேயிழையாள்
அங்கணனார் திரோதானத் திருவடியி லமர்ந்தொடுங்கும்
துங்கமிகு மூவாண்டு நிறைவுவிழாத் துரிசகன்றே
இங்கியல அருள்புரியாய்! மணக்குளம்வாழ் இறையவனே!

வாழைமுதன் முக்கனியு மோதகமு மகிழ்ந்துண்ணும்
பேழைவயிற் றேய்அவ்வைப் பெருமாட்டிக் கருள்குரவா!
மாழையொண்கண் மாரிமுத்தாம் பூம்பாவை புத்துயிரின்
வாழ்வுபெற அருள்புரியாய்! மணக்குளத்து விநாயகனே!

அவநெறிக்கே யாளாகா தடியேம் அருணெறியாம்
சிவநெறியே கண்டிடவுன் திருவருளை வேண்டுதுமால்
தவநெறியோர் பெறும்பரம தத்துவமாம் தனிப்பொரு
[ளே
பவநெறிதீர்த் தருள்புதுவை மணக்குளம்வாழ் பண்ண
[வனே.

பொய்திகழும் புரைநெறிகள் போயகல நித்தியமாம்
மெய்திகழுஞ் சிவநெறியே மேதினியில் நனிவிளங்கத்
தெய்வநந்தி வடிவாகி வந்தருளாய்! சிற்பரனே!
வையநிகழ் புதுமைதிகழ் மணக்குளத்து விநாயகனே!

நமப்பார்வதீபதயே! ஹர ஹர மஹா தேவ!

ஸ்ரீ மணக்குளவிநாயகர் திருவடி வாழ்க.

சைவம் தழைக.

உ

திருவருள் துணை.

# ஸ்ரீமதி மாரிமுத்தம்மையார் பதிகம்.

"வித்தகம்" ஆசிரியர்
யாழ்ப்பாணம் தென்கோவை
ச. கந்தையபிள்ளையவர்கள்
இயற்றியது.

புதுவை நந்தி யெம்பெருமான் அடியார் குழாத்துள்
ஒருவராகிய
ஸ்ரீமதி. மாரிமுத்தம்மையார்
எம்பெருமான் திரோதானத் திருவடியில்
திருத்தக ஒடுங்கிய
மூன்றாவது ஆண்டு நிறைவு விழாக்காலமாகிய
நிகழும் பவ ஆண்டு பங்குனித் திங்களில்.
திருவாதிரை நாளில் (10—4—35) ஓதப்பட்ட இப்பதிகம்
அவ் விழாக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட
அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.

## தரவு கொச்சகம்.

வேதவொலி சிறந்திடலால் விழுத்தொண்டை நாட்டுற [லால்
வேதவடி வாமிறைவன் வேதவுண்மை வழங்குதலால்
வேதபுரி யெனப்புகலும் வியன்புதுவை வளம்பதியோர்
மாதுயர மகன்றயநீ வருவதென்றோ! மாரிமுத்தே!

புதுவையே பெருந்துறையாம் புதுவையே புகலிடமாம்
புதுவையே யெம்பெருமான் புதுமைதிக ழிடமென்றால்
புதுவையிற்புத் துயிரொடுநீ போதருதல் வியப்பாமோ!
புதுவையோர் தவப்பயனும் பூம்பாவாய்! மாரிமுத்தே!

மோனகுரு பரன்கயிலை முதற்குரவன் திருநந்தி
வானவருந் தொழும்புதுவை மாநகரிற் புதுமைபல
தானருளு மென்றாலிச் சகமறியப் புத்துயிர்ப்பே(று)
ஆனதுமொன் றாகாதோ! ஆரறிவார்! மாரிமுத்தே!

அங்கமெனு முடலுயிர்க ளமலமடைந் தருள்வடிவாய்த்
துங்கபர லிங்கமுடன் றோய்தலே முத்தியெனும்
பங்கமிலாச் சிவநெறியிப் பாரகத்து நிலைநாட்ட
மங்கையருக் கரசியென வருவதென்றோ! மாரிமுத்தே!

தீம்பாடு முளத்தமணர் தீநெறிகள் பாழாகக்
காம்பாடுந் தோளுமையாள் கான்முளைபாங் கவுணியனால்
பூம்பாவை புத்துயிரிற் போந்ததொண்டை வளநாட்டு
மேம்பாடிவ் வுலகறிய விளக்குவையோ! மாரிமுத்தே!

அம்பலத்தி லாடுமைய னருண்மொழியும் பொய்யாமோ!
செம்பலமா நீபுரிந்த திருப்பணிக ளறியானோ!
இம்பருமும் பரும்போற்ற வெழுந்தருளி வாரானோ!
வம்பலர்பூங் குழலணங்கே! பூம்பாவாய்! மாரிமுத்தே!

என்றுவரு வாய்கொல்லோ! எனவெதிர்பார்த் திரங்கு [கின்றார்
துன்றியபே ரன்புடைய சோதரரே முதற்கேளிர்
நன்றவர்தாங் களிகூர நயந்துவரல் எந்நாளோ!
மன்றனடிப் பணிமறவா மாண்புடைய மாரிமுத்தே!

"வித்தக"த்தால் வேதவுண்மை மேதினியோ ரினிதுணர
மெய்த்தொண்டு புரிநாக ரத்தினவேள் விமலனுள்
புத்தமுதிட் டயர்விழவு காணுயோ! பூம்பாவாய்!
வித்தகர்வாழ் புதுவைநகர் விளக்கவரு மாரிமுத்தே!

விண்ணவர்பல் லாண்டிசைப்ப மேதினியோர் குதூ [கலிப்பப்
புண்ணியர்க்குப் புதுவையே புகலிடமாய்ப் பொலிந்திலங்க
அண்ணலாந் திருமூல னருண்மரபு தழைத்தோங்க
நண்ணுவதென் றோ! புதுவை நாயகியே! மாரிமுத்தே!

சித்தர்புகழ் புதுவைநகர்த் திறம்பாடுந் திருத்தொண்டு
பத்திநெறி தழுவாத பாவியேற் கெளிதாமோ!
புத்துயிரோ டுணைத்தருதல் புதுவையெனும் பெருந் [துறைவாழ்
சித்தனுக்கும் அரிதாமோ! சிவக்கொழுந்தே! மாரிமுத்தே!

நமப்பார்வதீபதயே!

ஹர ஹர மஹா தேவ!

புதுவை நந்தி பொன்னடி வாழ்க.

சைவம் தழைக.

# உண்மை முத்திநிலை ஆராய்ச்சி மறுப்பு.

"வித்தக"ப் பத்திராசிரியர் எழுதியது.

(தொகுதி 2. 19, 20-ம் வாரத் தொடர்ச்சி.)

### சுவேதாசுவதர உபநிடதம்.

"ப்ருதிவ்யாப்தேஜோநிலகேஸமுத்திதே
பஞ்சாத்மகேயோககுணேப்ரவ்ருத்தே
நதஸ்யரோகோநஜராநம்ருத்யு:
ப்ராப்தஸ்யயோகாக்நிமயம்சரீரம்."

(இ—ள்) ஐந்து தன்மைகளையுடைய பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களும் (சரீரம்—தன்னிலை முன்னிலைகள்) வெல்லப் பட்டபோது, யோகத்தின் பயனான சகல.ஐசுவரியமும் உண்டானபோது (அமல முதற்படி அடைந்த போது என்பது.) யோகத்தாலான தேஜோமயமான (பொன்மயமான) சரீரத்தை அடைந்தவனுக்கு (மாற்றிப்பிறந்தவனுக்கு) நோயில்லை ஜரையில்லை (நரை, திரை, மூப்புப், பிணி இல்லை) மரணம் இல்லை என்பதாம். மனமும் மதியும் ஒன்றுதலாகிய சிவயோக நிலை எனப்படும் அமல முதற்படி கண்டு விமல மடைந்தமையால் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கிய இவன் சரீரம் (உடலுயிர்) முறையே அமல மடைந்து சூக்குமமாய் (ஓ வடிவம்) அருளாய் வெளியாய் ஞானகாசத்தில்—பரத்தில் ஒடுங்குவதேயன்றி, அசுத்த நிறை நீங்கப்பெறாத உலகமாக்கள் மருளுடம்பு போல பிணமாகி விழ மாட்டாது (மரணம் நேரமாட்டாது) என்பது இவ் உபநிடத சுலோகத்தால் போந்த பொருளாகும்.

### சாந்தோக்கியம்.

"ஸர்வாணிபவா இமாநிபூதாநி
ஆகாசாத்ஏவஸமுத்பத்யந்தே
ஆகாசம்ப்ரத்யஸ்தம்யந்தி."

(1—6—1)

இந்தப் பிராணிகள் அனைத்தும் ஆகாசத்தில் நின்றும் உற்பத்தியாகின்றன; ஆகாசத்தில் ஒடுங்குகின்றன என்பது இதன் பொருளாகும்.

### தைத்திரியம்.

"ஆகாசசரீரம்ப்ரஹ்ம"

ஞானகாசமே பிரம சொரூபம் என்பது இதன் பொருளாகும். ஒடுங்குங்கால் தூல சூக்குமங்கள் ஒருங்கே அமலமடைந்து அருளாய்வெளியாய் ஒடுங்குவனவாகும். ஒடுக்க முறையாகிய நிவிர்த்தி முறை இதுவே யாம். உயிர் தூலத்தை விட்டுச் சூக்குமத்தோடு நிற்றலும் முத்தி அடைதலும் முடியாத காரியம் என்பதே வேத உண்மையாதல் மேலே கூறிய பிரமாணங்களால் வெள்ளிடையாயிற்று.

சிவாகமங்கள் என வழங்கும் நூல்களிலும் சோபான முறையைத் தழுவிப் பல பேதங்கள் காணப்படுவனவாயினும் பொதுவாக காமிகம் முதல் வாதுளம் ஈறாக உள்ள ஆகமங்களின் உத்தரகாண்டம் யாவற்றிலும் சிறப்பாக வீராகம வாதுளாகமங்களின் பூர்வ உத்தர காண்டங்கள் முழுவதிலும் உடலுயிர் அமலமடைந்து சிவாங்கமாதலாகிய அங்க லிங்க ஐக்கிய நெறியை உணர்த்தும் சிவாத்வைத சித்தாந்தமே கூறப்படுதலால் தூல சூக்குமங்களின் அந்நியோந்நிய சம்பந்தம் ஆகமங்களாலும் வற்புறுத்தப்பட்டமை வெள்ளிடை மலையாம். வேத முடிபும் ஆகம முடிபும் ஒன்றே என்ப.

### சித்தாந்தசிகாமணி.

செப்பும்வேதசித்தாந்தமபேதமாம்
ஒப்பின்மெய்ப்பொருளொன்றேயுரைத்தலால்
இப்பெருஞ்சொற்கலைகளிரண்டையும்
வைப்பரொப்பெனமானத்தறிஞரே.

ஏகனுற்றருள்காமிகமேமுதல்
ஆகமத்தினைநந்திடுஉத்தர
பாகமுற்றும்பகர்வீரசைவமாம்
சோகமற்றுயர்தேர்ன்மதந்தோன்றுமால்.

(ஷ உபதேசம் செ 13, 14)

வீர சைவம் சிவாத்வைதம் சைவ சித்தாந்தம் என்பன ஒன்றே யாம். பின் வரும் பிரமாணமும் வேத முடிபும் ஆகம முடிபும் ஒன்றே என்பதனை நன்று வலியுறுத்துகின்றது.

(தொடரும்.)

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

பட்டது. இதன் பெற்றி ஷை சூக்தப் பொருள் விளக்கமுற உரைக்குங்கால் உரைக்கப்படும். ஈண்டு விரிப்பில் பெருகும். சினம் என்பது உரிய சாதகங்களால் தணிந்து — அஃதாவது வெகுளியாய் மாற்ற மடைந்து பின் விமல உடலம் அமல மடையுங்கால் வெகுளியின் நாமமும்—இயல்பும் கெட்டு ஒழியும். இதுபற்றியே

குறள்.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமம் கெடக்கெடு நோய்.

(ஷை 36-ம் ஆதி. மெய்யுணர்தல் செ. 10)

எனப் பணித்தனர் தேவர்.

சினம் புறத்துத் தோன்றுதவாறு அவச்சலனமின்றி மதிப் பொலிவோடு ஒழுகுதலே உலகியலுக்கு ஏற்பச்சினம் தணிதலாகும். சினம் உரிய சாதங்களால் மாற்றமடைந்து கெடுதலே உண்மை நிலைக்கு ஒப்பிய தணிதலாகும். சினம் புறத்துத் தோன்றுதவாறு தந்திரமாக ஒழுகுதலால் லௌகிக சித்திகளும், அது வெகுளியாய் மாற்ற மடைந்து பின் கெடுதலால் பாரமார்த்திகமாகிய நித்தியத்துவமும் உளவாகும். மேலும் விரிப்பின் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் "ஆறுவது சினம்" என்னும் ஔவை திருவாக்கின் உலகியலுக்கும் உண்மை நிலைக்கும் ஒப்பிய பொருள் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்!

## அறிவிப்பு

கடிதர்களின்
அபிப்பிராயங்களுக்கு
அவர்களே பொறுப்பாளிகள்.

## திருவாசக உண்மை.

தென்கோவை தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான், ச. கந்தையபிள்ளை
(வித்தகம் பேராசிரியர்)
அவர்களால் எழுதப்பட்டது.

கடவுள் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி அகில சீவர்கள் உய்யும் பொருட்டு உதவி யருளியதும், மாணிக்கவாசகர் அருளிச் செய்ததும் தெய்வத் தமிழ் வேதமுமாகிய திருவாசகத்தின் உண்மைக் கருத்துக்களை நன்கு விளக்கி வசன நடையில் எழுதப்பட்டது.

வேண்டுவோர் 0–2–9 அணு தபால் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

## வித்தகம்

முதல் வருட சஞ்சிகைகள்
புத்தகமாக கட்டப்பட்டன.

முதுகில் தோல்—கலிக்கோ
ரூ. 4—0—0
முழு கலிகோ ... ... ரூ. 3—12—0
முதுகில் கலிகோ—மார்பில் தாள்
ரூ. 3—8—0
(தபால் செலவு பிரத்தியேகம்)

"வித்தகம்" ஆபீஸ்,
புதுவை.

இனும்! இனும்!!

## சுத்த சாதகம்

துறவின் றன்மையையும், தேகம் சித்திபெற்றால் முத்தியுண்டாமென்பதன் றன்மையையும், சாதன சதுஷ்டயத்தின் றன்மையையும், மகாவாக்கியத்தின் பொருளையும், சொரூபானுபவத்தின் றன்மையையும், வேதாகமங்கள் கருத்துவகையால் வேறுபாடின்றி யிருக்கும் வகையையும், தத்துவ ஞானதிற்குப் பரம்பரா சாதனமா உள்ளவைகளின் றன்மையையும், யுள்ளங்கை நெல்லிக்கனிபோல் செப்பமாக விளக்கியுள்ள இந்நூலை துக்க நிவர்த்தியிலும் பரமாநந்தப் பிராப்தியிலு மிச்சையுள்ள ஒவ்வொருவரும் அத்தியாவசியமாய் அறிய வேண்டியதென்பது குன்றின் மேலிட்ட விளக்காம்.

வேண்டுவோர் தபால் முத்திரை செலவுக்கு உரிய 6 சதம் ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.
புதுச்சேரி.

## "வித்தகம்"

## சந்தா விவரம்.

வருட சந்தா
உள் நாட்டிற்கு முன் பணம் ரூ. 3 0 0
வெளி நாட்டிற்கு ,, ,, ரூ. 4 0 0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

## பிழை திருத்தம்.

வித்தகம் தொகுதி. 2. இல. 14.

| பக்கம். | பிரிவு. | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| 2 | 2 | 19 | செம்பஞ்சு. | சிறுபூளை, செம்பஞ்சு. |
| ,, | ,, | 23 | சிறுபூண். | சிறுபூளை. |

Imprimerie "VITTAGAM"— Pondichery. Le Directeur-Gerant. R. Nagarattinam.